பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 14 புதன்கிழமை 30.11.2022 கதிர் 25

## இது ரகசியம் அல்ல!

‘சணம் பித்தம் சணம் வாதம்’ என்பார்கள். நேரத்துக்கு ஒரு மாதிரிப் பேசுவோரையே இப்படிக் கூறுவது உண்டு.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்றப் பேச்சுக்களைச் செவிமடுத்த தமிழ் முற்போக்குக் ☞2

# ‘றோ’வின் தலைவரை ஜனாதிபதி சந்தித்திருந்தால் நாடாளுமன்றுக்குத் தெரியப்படுத்தக் கோருவோம்!

### இப்படிக் கூறுகின்றார் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களிடம் எதனையும் மறைப்பவர் அல்லர். எனவே அவர் இந்திய புலனாய்வு பிரிவான ‘றோ’வின் தலைவரைச் சந்தித்திருந்தால் அது தொடர்பில் நாடாளுமன்றத்திற்கு தெரியப்படுத்துமாறு கோருவோம். எனினும் எனக்கு இது குறித்து எதுவும் தெரியாது என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது, ‘றோ’ தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார் எனக் கூறப்படுகின்றமை தொடர்பில் கேட்கப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் – ☞2



# மாவீரர் தின அனுஷ்டானம் மூலம் தமிழ் மக்கள் தெற்குக்குச் செய்தி





### மனோ கணேசன் எம்.பி. விளக்குகின்றார்
### புரிந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்து

இம்முறை மாவீரர் தின அனுஷ்டானங்களை அரசியல் பிரமுகர்களை முன்னிலைப்படுத்தாமல், கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று மேற்கொண்டமை மூலம் தமிழ் மக்கள் தெற்குக்கு ஒரு செய்தி சொல்லியிருக்கின்றார்கள். அதனைப் புரிந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. ☞2

## நினைவேந்தலைத் தமிழர்கள் வீடுகளுக்குள் செய்யலாமாம்!

### பொருமுகிறார் சரத் வீரசேகரா

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை தமிழர்கள் தமது வீடுகளுக்குள் இருந்தவாறு நினைவுகூர்ந்து கொள்ளலாம் என நாடாளுமன்ற ☞9

## யாழில் போக்குவரத்து ஊழியர் பணிப் பகிஷ்கரிப்பு முடிவுக்கு!

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய சாலை ஊழியர்களின் பணி புறக்கணிப்பு கைவிடப்பட்டது. நேற்று மதியம் இரண்டு மணியில் இருந்து போக்குவரத் துச் சேவைகள் மீள ஆரம்பித்துள்ளன.

பொலிஸ் அதிகாரிகளின் ☞9

## மாகாண சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்தி சபைகள்!

### தயார் என ரணில் நேற்று திடீர் அறிவிப்பு

கொழும்பு,நவம்பர்30

மாகாண சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்தி சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கு தயார் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி ☞9

## யுத்தத்தை வென்றோம்; ஆனால் இன்னும் சமாதானத்தை வெல்லவே முடியவில்லை!

### வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய வேதனை

கொழும்பு,நவ.30

2009ஆம்ஆண்டுயுத்தம்வெற்றிகொள்ளப்பட்டாலும் நாட்டில் சமாதானம் வெற்றி கொள்ளப்படவில்லை என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ☞9



## தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளில் சிலரின் செயற்பாடுகளால்தான் பிரச்சினை!

### நாடாளுமன்றத்தில் சார்ள்ஸ் நிர்மலநாதன் விவரிப்பு

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாடுகளுக்கு இடமளிக்க வேண்டும். தொல்பொருள் திணைக்களத்தின் ஒருசில அதிகாரிகளின் செயற்பாடுகள் பிரச்சினைளைத் தீவிரப்படுத்தி, இனங்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் காணப்படுகின்றன எனத் தமிழ்த் தேசியக் ☞9



## 13 க்கு இணங்குவதற்கு நாங்கள் ரெடி; ரணிலின் அரசுப் பக்கத்தினர் ரெடியா?

### ஜனாதிபதியைத் தெளிவு படுத்தக் கோருகிறது எதிரணி

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ளவாறு அதிகாரப் பகிர்வுக்கு எதிர்க்கட்சி தயாராகவே உள்ளது. இருப்பினும் நாட்டை முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்வதற்கு நாட்டில் இருக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு என்பவற்றை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்து கட்சிகளையும் பேச்சுவார்த்தைக்காக அழைப்பு ☞9



## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் தலைவர் மனோ கணேச னுக்கும் இப்படி ஒரு சந்தேகம் வந்துவிட்டது போலும்.

இவ்வாறு ஓர் ஐயுறவு அவருக்கு வருவதில் நியாயம் உண்டு. அதை மறுப்பதற்கு இல்லை.

கடந்த வாரம்தான் நாடாளுமன்றத்தில் அதிகார பகிர்வுக்குத் தயார் என்றார் ஜனாதிபதி. 13 ஆவது திருத்தத்துக்கு முழு ஆதரவு, 13 பிளஸையும் பற்றிப் பேசலாம் என்ற அவர், எதிர்க்கட்சிகளைப் பார்த்து, ஒவ்வொரு தரப்பாகக் கையை நீட்டி, 'நாங்கள் ரெடி; நீங்கள் ரெடியா?' - என்ற பாணியில் கேள்வியும் எழுப்பினார்.

அவ்விடயம் குறித்து வரும் 11 ஆம் திகதி தொடங்கும் வாரத்தில் இருந்து பேசுவோம் என்று வேறு அவர் அறிவித்தார்.

தமிழர் தரப்பு சமஷ்டி என்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரப் பகிர்வு, மாகாண சபை முறைமை என்று பேசுகிறார். 13 பிளஸுக்கும் தயார் என்கிறார் மஹிந்த ராஜபக்ஷ. பதிமூன்றுதான் - அதன் முழு நடைமுறையாக்கமே சாதகம் என்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா.

இப்படி எல்லோரும் மாகாண சபை, 13 ஆம் திருத்தத்தின் முழுமையான நடைமுறையாக்கம், 13 பிளஸ் என்பவை குறித்தெல்லாம் பேசிக் கொண்டிருக்கும் போது, திடீரென 'பழைய குருடி கதவைத் திறவடி!' என்ற கதையாக 80களில் ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்டுக் கைவிடப்பட்ட - இலங்கை, இந்திய ஒப்பந்தத்திற்கு முற்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை என்ற திட்டத்தை - நடைமுறைப்படுத்தத் தயார் என நாடாளுமன்றத்தில் அறிவிக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

'சணம் பித்தம்' என்ற நிலையில் இருந்தவர், அடுத்த கணம் 'சணம் வாதம்' என்ற நிலைக்கு வந்துவிட்டார் போலும்.

அவரது நேற்றைய அதிரடி மாற்றப் போக்கால் மனம் வெதும்பி வெடித்திருக்கின்றார் மனோ கணேசன்.

ஜனாதிபதி ரணிலின் பேச்சின் பின்னர் நேற்று மதியம் நாடாளுமன்றக் கன்ரீனில் இது நடந்தது.

ஒரு மேசையில் மனோ கணேசன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா) ஆகிய மூவரும் அமர்ந்து சாப்பிட்டு கொண்டு இருந்தார்கள். அருகில் பக்கத்து மேசையில் சார்ள்ஸ் நிர்மலநாதன், ஶ்ரீதரன் ஆகியோர்.

அச்சமயம் தமது ஆளணி, பரிவாரங்களுடன் சாப்பிட வந்தார் மஹிந்த ராஜபக்ஷ. ஒவ்வொரு மேசையிலும் இருந்த எம்.பிக்களுடனும் ஓரிரு நிமிடங்கள் நின்று, பேசி, குசலம் விசாரித்து, நகர்வது அவர் வழமை.

சார்ள்ஸ் நிர்மலநாதன், ஶ்ரீதரன் ஆகியோருடன் அவர் குசலம் விசாரித்துக் கொண்டிருந்த போது மனோ கணேசன் அவரை நெருங்கினார். நேரடியாகவே மஹிந்தவிடம் ஒரு கேள்வி எழுப்பினார். "கதை தெரியுமா?" என்று தொடங்கினார் மனோ.

"நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் தான் அதிகார பகிர்வு, மாகாண சபைகளுக்கு 13 ஆவது திருத்தப்படி முழுமையான அதிகாரங்களை வழங்குவது, 13 பிளஸ் என்றெல்லாம் ஜனாதிபதி பேசினார். 'நாங்கள் தயார்; நீங்கள் தயாரா?' என்று ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என எதிரணியில் இருந்த எல்லாத் தரப்புக்களையும் உசுப்பேத்திக் கேட்டார். உங்களைக் கூட லக்ஷ்மன் கிரியெல்ல மூலம் '13 பிளஸுக்குத் தயாரா?' என்று கேட்கப் பண்ணி, உங்களை எழும்பிப் பதிலளிக்கும் நெருக்கடிக்குத் தள்ளினார். இவற்றையெல்லாம் செய்து விட்டு, இப்போது, இன்று, நாடாளுமன்றத்தில் வந்து 'மாவட்ட அபிவிருத்தி சபைகளை நடைமுறைப்படுத்தத் தயார்!' என்று அறிவிக்கின்றார். இந்தச் சடுதியான மாற்றத்திற்குக் காரணம் என்ன? நீங்கள் ஏதும் மறைமுக அழுத்தம் கொடுத்து விட்டீர்களா? திரைமறைவில் ஏதோ செய்து விட்டீர்களா?" - என்ற மாதிரி நெற்றிக்கு நேரே மஹிந்தவிடம் ஆணி அடித்தால் போல கேட்டார் மனோ.

"இல்லை, இல்லை. நாங்கள் அப்படி ஒன்றும் செய்யவில்லை. செய்யவும் மாட்டோம்.!" - என்று உறுதியளிக்கும் பாணியில் கூறினார் மஹிந்தர். அப்படியானால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய திடீர் சறுக்கலுக்குக் காரணம் என்ன? பழுத்த அரசியல்வாதியான அவர் இப்படி சணம் பித்தம், சணம் வாதம் போன்று வாய்க்கு வந்த மாதிரி பேச மாட்டார்.

ஆனால், திடீரென இப்படி அவர் பழைய பல்லவியை அவிழ்த்து விட்ட மைக்குக் காரணம் என்ன என்று தேடிப் பார்த்தால், மூலங்களைக் கண்டுபிடிக்கலாம். கொஞ்சம் பொறுங்கள். தேடிப் பார்த்துக் கூற முயற்சிக்கிறேன்.

- மின்னல் -

## 'றோ'வின் தலைவரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'றோ' இந்திய புலனாய்வு பிரிவின் தலைவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அல்லது அரச அதிகாரியை சந்தித்தார் எனக் கூறப்படுகின்றமை தொடர்பில் எனக்குத் தெரியாது.

எவ்வாறிருப்பினும் இவ்வாறானதொரு சந்திப்பு இடம்பெற்றிருக்குமானால் அது தொடர்பில் நாடாளுமன்றத்திற்கு அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் தெரிவிக்க முடியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல விடயங்கள் தொடர்பிலும் நாட்டுக்கு எந்தவொரு விடயத்தையும் மறைக்காமல், அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்துகின்றார் என்பது எமது நம்பிக்கையாகும். - என்றார்.

இந்தியப் புலனாய்வு பிரிவான 'றோ' வின் தலைவர் கொழும்பிற்கு விஜயம் செய்தார் எனவும், அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்தார் எனவும் பிரதான ஊடகங்கள் பல செய்திகளை வெளியிட்டிருந்தன.

இது தொடர்பில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்திடம் ஊடகவியலாளர் மாநாடொன்றில் கேட்கப்பட்ட போது, அவ்வாறான சந்திப்புக்கள் தொடர்பில் தனக்குத் தெரியாது என்றும், எனினும் பஸில் ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கு எவருக்கும் எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை என்றும் பதிலளித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார் எனக் கூறப்படுகின்றமை தொடர்பில் ஜனாதிபதியின் தரப்பிலிருந்தோ அல்லது அரசாங்க தரப்பிலிருந்தோ எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்புக்களும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. இந்நிலையிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும் இது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் தின ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் நாளில் கிளிநொச்சி - கனகபுரம் துயிலும் இல்லத்தில் அலைகடலெனத் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தின் படத்தை இணைத்துத் தனது முகநூலில் பதிவொன்றை இட்டுள்ளார் அவர்.

அந்தப் பதிவில் அவர் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இது 2022 நவம்பர் செய்தி படம். பல பக்க செய்திகளை இந்த ஒரே படம் சொல்கின்றது.

கொடுங்கோண்மைக்கு எதிராகப் போராடி மாண்ட மாண்புகளை மறக்க மாட்டோம் என்பது பிரதான செய்தி.

அரசியல் பிரமுகர்களை முன்னிலைப் படுத்தாமல், கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று இந்தச் செய்தி தெற்குக்கு கூறப்படுகின்றது.

இம்முறை நினைவேந்தல் நிகழ்வுகளைப் பெரும் கெடுபிடி இல்லாமல் நடக்க விட்டுள்ளார், ரணில்.

கொடுங்கோண்மையை மறக்க மாட்டோம்; ஆனால் மன்னிப்போமா என அந்த மக்களேதான் கூற வேண்டும்.

ரணில், இதை இந்த மக்களிடம் நேரடியாகக் கேட்டு தெரிந்து கொள்வதற்கான பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும். அதன் பின்னர்தான் உண்மையான நல்லிணக்க செயன்முறை ஆரம்பமாக முடியும்.

ஜனாதிபதி ரணிலிடம் இதை நேரடியாகக் கூற விரும்புகின்றேன் - என்றுள்ளது.

அதே சமயம் -

"மக்களிடம் நேரடியாகக் கேட்டு தெரிந்துகொள்வதற்கான பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்

என்று குறிப்பிட்டிருந்தேன். மக்களுடன் பேசும் பொறிமுறை என்பது தேர்தல் தான். குறைந்த பட்சம் அப்பகுதிக்கான மாகாணசபைத் தேர்தலையாவது நடத்துவதன் மூலம் அந்த மக்களுடன் பேசுவதற்கு ஜனாதிபதி தயாராக வேண்டும்" என்று 'காலைக்கதிர்' நாளிதழுக்கு அவர் நேற்றிரவு தெரிவித்தார்.

# அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு மொட்டுச் செயலர் நியமனம்!



ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் அரசாங்கத் தரப்பின் பெரும்பான்மைப் பிரதிநிதியாக அரசமைப்புக்கவுன்ஸிலுக்குநியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிற்கு இதனை அறிவித்துள்ளார்.

## ஹெரோயினுடன் யாழில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

56 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய 1.56 கிராம் ஹெரோயின் போதைப் பொருளைத் தனது உடைமையில் வைத்திருந்த போதே இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருள் தடுப்பு பிரிவுகள் மற்றும் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் இவர் கைதானார்.

விற்பனை செய்வதற்காக தனது வீட்டில் வைத்து சிறு பொதிகளை உருவாக்கிய பொழுது இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்பட்டது.

24 வயதுடைய இவர் புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் கூறப்பட்டது.

## சுண்டிக்குளம் காட்டில் 40 கிலோ கஞ்சா மீட்பு

கிளிநொச்சி - சுண்டிக்குளம் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 40 கிலோ மதிக்கத்தக்க 20 கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலிற்கு அமைவாக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் இராணுவப் புலனாய்வு பிரிவினர் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட சோதனையின் போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் விசேட அதிரடிப் படையினர், பொலிஸாரின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இராணுவத்தின் பிரதானியாக சன்ன வீரசூரிய



இலங்கை இராணுவத்தின் புதிய சிரேஷ்ட அதிகாரியாக மேஜர் ஜெனரால் சன்ன வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவ ஊடக பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் தளபதிக்கு அடுத்த நிலையில் சிரேஷ்ட அதிகாரியாகக் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் டிஜே கொடித்துவக்கு இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றமையை அடுத்து அந்த வெற்றிடத்திற்கு மேஜர் ஜெனரால் சன்ன வீரசூரிய இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# தமது பொறிக்குள் இலங்கையைச் சிக்கவைக்க இந்தியாவும், மேற்குலகமும் முயற்சிக்கின்றனவாம்!

## விமல் வீரவன்ஸ ஆக்ரோஷம்



கொழும்பு, நவ.30

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தமது பொறிக்குள் இலங்கையை சிக்க வைப்பதற்கு இந்தியாவும், மேற்குலகமும் முயற்சிக்கின்றன என்று உத்தரலங்கா சபாகயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

இலங்கை பொருளாதார ரீதியில் பலமிழந்துள்ளது. இதனை வைத்து பலம் பொருந்திய நாடுகள் இலங்கையின் கழுத்தை இறுக்கிப் பிடிக்க முற்படுகின்றன. தமது உபாயத்துக்குள் இலங்கையைக் கொண்டுவருவதற்கு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுவருகின்றன.

தமது நாட்டு ரூபாவை இலங்கையில் செயற்படுத்துவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. அவ்வாறு நடந்தால் இலங்கை இந்தியாவின் மாநிலமாக மாறக்கூடிய சூழ் நிலைமை தானாகவே உருவாகி விடும்.

மறுபுறத்தில் நாட்டில் போராட்டங்களைத் தூண்டிவிட்டு, அராஜக நிலைமையொன்றை உருவாக்குவதற்கு மேற்குலக நாடுகள் திட்டம் தீட்டுகின்றன.

ஹெட்டியில் போன்று இலங்கையிலும் ஆட்சி கட்டமைப்பு இல்லாத நிலைமையை தோற்றுவித்து, நாட்டை சீரழிக்க முற்படுகின்றன. இதற்காக 'என் ஜீஓ' காரர்கள் தூண்டி விடப்படுகின்றனர். – என்றார்.

# கையடக்கத் தொலைபேசி, இணைய கட்டணங்களை உடன் குறைக்குக!

## கயந்த கருணாதிலக்க கோரிக்கை



பொதுமக்கள் செலுத்தும் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இணைய சேவைக்கான கட்டணங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இணைய சேவைக்கான கட்டணத்தை விலையேற்றம் ஏற்ப டுத்திய தாக்கம் தொடர்பாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த விடயத்தில் ஓரளவு என்றாலும் நிவாரணம் வழங்குவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கயந்த கருணாதிலக்க கேட்டுக்கொண்டார்.

# வர்த்தக நிலையத்தை உடைத்து ரயர்களை திருடிய இருவர் கைது!

## வெல்லவாயவில் சம்பவம்

வெல்லவாய, ரந்தெனிய பிரதேசத்தில் வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து ரயர்களை திருடிய குற்றச்சாட்டில் இருவர் வெல்லவாய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் சியம்பலாண்டுவ பிரதேசத்தில் உள்ள ரயர் கடையொன்றில் இருந்து சுமார் இருபது லட்சம் ரூபா பெறுமதியான ரயர்களை திருடி அவற்றை வெல்லவாய பிரதேசத்துக்கு எடுத்துச் சென்று மறைத்து வைத்திருந்தனர் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் வசம் இருந்த திருடப்பட்ட ரயர்களின் ஒரு பகுதியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

# மைக்ரோ ரக பிஸ்டல், தோட்டாக்களுடன் முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது!

மினுவாங்கொடை பகுதியிலுள்ள வீடொன்றில் மைக்ரோ ரக பிஸ்டல் மற்றும் 14 தோட்டாக்களுடன் முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என கம்பஹா குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற 42 வயதுடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கம்பஹா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

# சரியான ஒழுங்குபடுத்தல்களின்றி கசினோ உரிமம் வழங்கக்கூடாது

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து



இலங்கைக்குள் சூதாட்ட விடுதிகளை நடத்துவதற்கு உரிமம் வழங்கப்பட வேண்டுமானால், உடனடியாக சூதாட்ட ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும் என கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், உலகின் எந்த நாட்டிலும் கசினோ ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இல்லாமல் கசினோ உரிமங்கள் வழங்கப்படுவதில்லை என சுட்டிக்காட்டினார்.

மேலும், சம்பந்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எப்போது கொண்டு வரப்படும் என்பது தொடர்பாகக் குறைந்தபட்சம் தோராயமாக கோப் குழுவிற்கு தெரியப்படுத்துவது அவசியம் என்றும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் பயனுள்ளதாக மாற்றியதன் பின்னர் அனுமதியை பரிசீலிப்பதே சிறந்தது என கோப் குழுவின் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தப்படும் வரியைத் தவிர, சூதாட்ட விடுதியை நடத்துவதற்கு எவ்வித ஏற்பாடும் இல்லை எனவும், ஆரம்ப கட்ட நடவடிக்கையாக இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# ஓமான் தூதரக அதிகாரி கட்டுநாயக்கவில் கைது!

ஓமானிற்கு பெண்களை கடத்தும் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டவர் என சந்தேகிக்கப்படும் ஓமானிற்கான இலங்கை தூதரகத்தை சேர்ந்த அதிகாரியொருவர் கொழும்பு கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை கொழும்பு கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தவேளை சி.ஐ.டி.யினரால் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மூன்றாம்நிலை செயலாளர் தர அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் பெண்களைக் கடத்திய குற்றச்சாட்டில் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தின் மூன்றாவது செயலாளராகப் பணிபுரிந்த இ.குஷான் என குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மக்களின் போராட்டம் இன்னும் ஓயவில்லை!

## கே.டி.லால்காந்த எச்சரிக்கை



மக்கள்போராட்டம்இன்னும்ஓயவில்லை என்பது ராஜபக்ஷர்கள் உள்ளிட்ட ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

பூண்டுலோயா பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பேசிய அவர், விமான நிலையம் வந்த பஸிலுக்கு அவரின் சகாக்கள் மற்றும் அடியாள்களால் வழங்கப்பட்ட வரவேற்பு தொடர்பாகவும் அவர் அதிருப்தி வெளியிட்டார்.

கொள்ளையர்கள் மற்றும் பொருளாதாரத்தை நாசமாக்கியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறு கொள்ளையடிக்கப்பட்ட வளங்கள் நாட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என மக்கள் தொடர்ந்தும் போராடுவதை கருத்திற் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஓர் ஒளிக்கீற்று

**நவம்பர் மாதம் இன்றுடன் முடிகின்றது. இந்த நவம்பர் மாதம் செய்தி சொன்ன படம் என்று குறிப்பிட்டு ஒரு படத்தை தமது முகப்புத்தகத்தில் பதிவிட்டு இருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கனேசன் எம்.பி.**

**அது மாவீரர் தினத்தன்று நினைவேந்தலுக்காகக் கிளிநொச்சி கனகபுரம் துயிலும் இல்லத்தில் திரண்ட மக்கள் கூட்டத்தைக் காட்டும் படம். இருள் கவ்வும் வேளையில், சோகமே உருவாகத் திரண்டிருந்த மக்கள் கூட்டம்.**

**எந்தக் கலை நிகழ்ச்சிகளும் இல்லை. கவர்ச்சிகரமான அம்சங்களும் இல்லை. ஆர்ப்பாட்ட நிகழ்வுகளும் இல்லை. ஏன் நிகழ்வின் கதாநாயகர்களே கண்முன்னே இல்லாதவர்கள். என்றோ வெட்ட வெளியில் கரைந்து விட்டவர்கள். காற்றோடு கலந்து, மண்ணோடு மண்ணாய்ப் போனவர்கள். பூமித் தாய்க்காய் விதைக்கப்பட்டவர்கள். அவர்கள் மீண்டு வரப் போவதில்லை. அவர்களின் இயக்கம் கூட மீண்டெழப் போவதில்லை. மிஞ்சியவை எல்லாம் அவர்களின் இமயம் போன்ற ஈகம் மட்டுமே. தற்கொடை சோகம் என்ற நினைவு மட்டும்தான்.**

**ஆனால் அவர்களைக் கண்ணீர் பெருக, சோகம் கொப்பளிக்க, உணர்ச்சி ததும்பத் தங்கள் நெஞ்சில் நிறுத்திப் பூசித்து வழிபடுவதற்காக அந்த மக்கள் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக ,அதே நேரம் மன உறுதியுடன் அங்கே அலை கடலெனத் திரண்டு நிற்கின்றார்கள்.**

**அரசியல் பிரமுகர்களை முன்னிலைப்படுத்தாமல், கட்சி அரசியலுக்கு அப்பால் ஒன்று திரண்ட அந்த மக்கள், அந்தக் காட்சி மூலம் தெற்குக்கும் கூட ஒரு செய்தி சொல்கின்றார்கள் என்ற மனோ கனேசனின் கூற்று ஆழமானது, அர்த்தம் நிறைந்தது.**

**கொடுங்கோன்மைக்கு எதிராகப் போராடி மாண்ட தங்கள் உத்தம மறவர்களை மறக்க மாட்டோம் என்பது அந்த மக்கள் தரும் பிரதான செய்தி என்று அவர் கூறுவது சரிதான்.**

**அதே சமயம் இத்துணை காலமும் மக்களின் இத்தகைய நினைவேந்தல் உரித்தைப் படைபலம் கொண்டு, பேரினவாத மேலாண்மைத் திமிரோடு, நீ அடக்கி வைத்திருந்தாய் என்பதை அந்தப் பேரினவாதத்துக்கு எடுத்துக் காட்டும் படமாகவும் அது அமைவது கவனிக்கப்பட வேண்டியது.**

**இந்த நினைவேந்தல் நிகழ்விலும் கூட ஓர் ஆழ்ந்த சோகம் – தாளாத துக்கம் –மனதைக் கவ்வும் கழிவிரக்கம் – எல்லாமும் இழந்தோம் என்ற துயரம் – எதையுமே ஈட்டவே இல்லை என்ற ஆற்றாமை – எல்லாம் வெடித்து கிளம்பின.**

**ஆனால, ஒரு நியாயமான போராட்டம் கொடுங்கோன்மையால் – யுத்தக் குற்றங்களால் – மனித மாண்புகளுக்கு மாறான கொடூரங்களால் – மோசமான அடிப்படை மனித உரிமை மீறல்களால் – முறையற்ற விதத்தில், நீதி, நேர்மை, உலக மாண்புகள் போன்றவற்றுக்கு மாற்றான முறைமையில் – அழிக்கப்பட்டது என்ற அறசீற்றம் அந்த மக்கள் மனதில் இருந்த போதிலும், அது பழிவாங்கும் வெஞ்சினமாக இந்த உணர்வுபூர்வ நிகழ்வுகளில் பிரதிபலிக்கவே இல்லை.**

**இங்குதான் எதிர்கால இன நல்லிணக்கத்திற்கான ஒரு சிறிய ஒளிக்கீற்று தோற்றுகின்றது.**

**இம்முறை நினைவேந்தல் நிகழ்வுகளை பெரும் கெடுபிடி இல்லாமல் நடக்க அனுமதித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த ஒளிக்கீற்றைப் பற்றிக் கொண்டு, இந்த மக்களுடன் பேச முற்பட வேண்டும்.**

**மனோ கனேசன் கூறுகின்றமைப் போல அந்த மக்களின் உணர்வுகளைத் தெரிந்து கொள்ள ஒரு பொது முறையை ஜனாதிபதி ஏற்படுத்த வேண்டும்.**

## விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு இலவசமாக டீசல் வழங்கும் சீனா!

சீனாவால் வழங்கப்படும் ஒரு கோடியே 60 லட்சம் லீற்றர் டீசல் இலவசமாக வழங்கப்படும் என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

2022/23 பெரும்போகத்தில் இலங்கை முழுவதும் 342,266 ஹெக்டேயர் நெல் வயல்களை அறுவடை செய்வதற்காக 232,749 விவசாயிகளுக்கு எரிபொருள் இலவசமாக வழங்கப்படும்.

மேலும், இலங்கையில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் 3 ஆயிரத்து 796 மீன்பிடி கப்பல்களுக்கும் சீனாவால் இலவசமாக டீசல் வழங்கப்படும் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## அரச நிறுவனங்களின் நிகழ்வுகளுக்கான செலவுகளை இரத்துசெய்து சுற்றறிக்கை!

அரச நிறுவனங்களில் முன்னெடுக்கப்படும் பல்வேறு நிகழ்வுகளுக்கான செலவுகளை இரத்து செய்து சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.நாட்டில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட நிதி கட்டமைப்பிற்குள், அரச நிறுவனங்களின் துறைசார் நிகழ்வுகள் மற்றும் வெளி நிகழ் வுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை இடைநிறுத்த கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்தது. அதற்கமைய, அமைச்சுகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள், அரச தொழில்முயற்சியாண்மை, மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச வங்கிகள், கடமைகளை பொறுப்பேற்றல் மற்றும் ஓய்வு பெறுவதுடன் தொடர்புடைய நிகழ்வுகள், சிநேகபூர்வ சந்திப்புகள், கொண்டாட்டங்கள் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளுக்கும் அரச நிறுவனங்களூடாக ஈட்டப்படும் நிதியை செலவிடுகின்றமை நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன் என ஜனாதிபதி கூறுகின்றமை ஜனநாயக விரோதம்!

### ஹிருணிகா தெரிவிப்பு



வீதிகளில் இறங்கிப் போராடும் மக்களை இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன் எனக் கூறும் ஜனாதிபதியின் செயற்பாடு ஜனநாயகத்துக்கு விரோதமானது என ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கக்கூடிய தீர்வு இதுவல்ல எனக் குறிப்பிட்டுள்ள அவர், முதலில் நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை ஆட்சியாளர்கள் கண்டறிய வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

தமது வாழ்க்கை தற்போது பாரியதொரு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள நிலையிலேயே நாட்டு மக்கள் போராடுகிறார்கள் என்பதை அரசாங்கமும் ஜனாதிபதியும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டால் ஹிட்லர் போன்று செயற்படுவது தீர்வாக அமையாது என குறிப்பிட்ட ஹிருணிகா, அவ்வாறு பயணித்தால் நீண்டகாலம் ஆட்சியை நடத்த முடியாது என்றும் எச்சரித்துள்ளார்.

## சாரதி அனுமதிப்பத்திர முறைமையில் மாற்றம் கொண்டுவருகின்றது அரசு!

சாரதி செய்யும் தவறுகளுக்கு புள்ளிகளைக் குறைத்து அதனுடன் தொடர்புடைய தண்டனைகளை விதிக்கும் முறைமை எதிர்வரும் காலங்களில் அமுல்படுத்தப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

வீதியில் வாகனங்களை செலுத்தும் போது தவறு செய்யும் சாரதிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தின் கீழ் 24 புள்ளிகளுக்கு உட்பட்டு அபராதம் விதிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஓர் சாரதி 24 புள்ளிகள் வரம்பை அடைந்தவுடன், அவரது சாரதி உரிமம் இரத்து செய்யப்படும், மேலும் மீண்டும் சாரதி அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ள பரீட்சை மற்றும் பயிற்சி மூலம் உரிமத்தை மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

புதிய முறையின் கீழ், பொலிஸ், நீதி மன்றங்களில் அபராதங்களை சம்பவ இடத்திலோ அல்லது தபால் நிலையத்திலோ, ஒன்லைனில் செலுத்தலாம் என்று அமைச்சர் லசந்த அழகியவண்ண கூறினார்.

ஓர் சாரதிக்கு அபராதம் விதிக்கப்பட்டு, ஒரு குற்றத்துக்காகப் புள்ளிகள் கழிக்கப்பட்டால், அந்த நபர் அதை நீதிமன்றத்தில் சவால் செய்யலாம் மற்றும் குற்றவாளிக்கு நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்படும், மேலும் புள்ளிகள் கழிக்கப்படும்.

ஓர் சாரதி ஒரு வருடத்தில் 2 புள்ளிகளை மட்டுமே இழந்தால், அடுத்த ஆண்டு 24 புள்ளிகளை மீட்டெடுக்க அவருக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும்.

ஒரு தசாப்தத்துக்கும் மேலாக நடைமுறையில் உள்ள இந்த முறையை அடுத்த வருடம் அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு உத்தேசித்துள்ளதாக லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரம் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் வெளியிடப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மேலும் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# காரைநகருக்குச் செல்லும் வீதியை புனரமைக்ககோரி மக்கள் போராட்டம்!









யாழ்ப்பாணம், நவ.30

786 மற்றும் 782 பஸ் வழித்தட வீதிகளை புனரமைக்குமாறு கோரி மக்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

காரைநகருக்கு செல்லும் மேற்படி இரண்டு பிரதான வீதிகளும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் அந்த வீதிகளை திருத்தம் செய்து தருமாறு கோரி மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் போக்குவரத்துகள் முடங்கின.

இந்தப் போராட்டத்தில் வலி. மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளர், வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## அராலியில் கடல் அட்டை பண்ணை அமைப்பதற்கு மீனவர்கள் எதிர்ப்பு!

அராலி பகுதி கடலில் அட்டைப் பண்ணை அமைப்பதற்கு அங்கிருக்கும் மீனவர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மீனவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

நாங்கள் கடற்றொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். பொருளாதார நெருக்கடியால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம், எமது கடலில் அட்டைப் பண்ணை அமைப்பது என்பது 'பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதிப்பது' போலாகும்,

கடந்த சில நாள்களுக்கு முன்னர் இங்கே வருகை தந்த சிலர் எமது கடலில் அட்டைப் பண்ணை அமைப்பதற்கு பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள். மேலும் இவ்வாறு அட்டைப் பண்ணை அமைக்கும் முயற்சியை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு இவ்வாறான செயற்பாட்டுக்கு இடமளிக்கவும் மாட்டோம்.

இதேவேளை, எரிபொருள் பிரச்சினை எமக்கு பாரியதொரு பிரச்சினையாக காணப்படுகின்ற நிலையில் இவ்வாறான அட்டைப் பண்ணைகள் எமக்கு புதிய ஒரு தலையிடியாக மாறியுள்ளது.

எனவே மீனவர்களது நிலையைக் கருத்தில் கொண்டு மிக விரைவில் இதற்கு ஒரு தீர்வு வழங்க வேண்டும் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## உணவு பணவீக்கத்தில் இலங்கை ஆறாவது இடம்!

உலகில் உணவுப் பணவீக்கம் அதிகம் உள்ள நாடுகளின் தரப்படுத்தலில் இலங்கை ஆறாவது இடத்தில் உள்ளது.

உலக நாடுகளின் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக உலக வங்கி கடந்த நவம்பர் மாதம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையின் அடிப்படையில், இலங்கையில் உணவுப் பணவீக்கம் 86 சதவீதமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக மோசமான உணவுப் பணவீக்கம் உள்ள நாடுகளின் பட்டியலில் சிம்பாப்வே முதலிடத்தில் உள்ளதுடன், அங்கு 321வீதம் உணவு பணவீக்கம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அடுத்ததாக 208 வீதம் லெபனானிலும், 158 வீதம் வெனிசுலாவிலும் உணவு பணவீக்கம் காணப்படுகின்றது.



# இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகின்றமையை நம்பலாமா?

## ஜி.எல்.பீரிஸ் சபையில் கேள்வி



இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்த அனைத்து அரசாங்கங்களும் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

இவ்வாறான நிலையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகின்றமை எவராலும் நம்ப முடியுமா? என முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சபையில் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

புதிய அரசமைப்பின் ஊடாக இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. குறிப்பாக அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வை வழங்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கூட்டிணைந்த அடிப்படையில் அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்துள்ளன. மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட அரசாங்கம் இருந்திருக்கிறது. இந்த அரசாங்கங்கள் எல்லாம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால் இந்த அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்தன.

இவ்வாறான நிலையில் அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியும் என எவராலும் நம்ப முடியுமா? உலகில் உள்ள எவரும் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பை கருத்தில் கொள்வார்களா? சர்வதேசத்தை ஏமாற்றும் செயற்பாடுகளே தொடர்ந்த வண்ணம் உள்ளன.

பொருளாதார மீட்சிக்கான நீண்ட காலத் திட்டமாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கப்போவதாக அரசாங்கம் கூறுகிறது. தென்னாபிரிக்காவில் உள்ளது போல உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவையா அமைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு ஆழமான விசாரணைகளை மேற்கொண்டது. கொலை, கொடூரமான குற்றச்செயல்களை செய்தவர்கள் தொடர்பில் இந்த ஆணைக்குழு விசாரணைகளை செய்தது. இதில் குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இந்த அடிப்படையிலா உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் கிடைக்கப்பெறும் என அரசாங்கம் குறிப்பிடுகிறது, ஆனால் நாணய நிதியம் மக்கள் ஆணை தொடர்பில் மூன்று சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தியுள்ளது. மக்கள் ஆணை எனும்போது தேர்தல் பிரதானமானது. இவ்வாறான நிலையில் தேர்தலை நடத்தாது விட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புகள் மற்றும் ஜி.எஸ்.பிளஸ் வரிச்சலுகை உட்பட சர்வதேசத்தின் ஒத்துழைப்பைக் கூட இழக்க நேரிடும்.

மாகாணசபைகளுக்கான தேர்தல் கடந்த மூன்று வருடங்களாக நடத்தப்படவில்லை. எந்தவொரு மாகாணசபைகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இல்லை.

இதே நிலைமை உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்பட்டால் பிரச்சினை ஏற்படும். ஜனநாயகத்துக்குப் புறம்பாக செயற்படும் போது சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியாது.

இலங்கையின் பொருளாதாரப் பாதிப்பு தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது. பொருளாதாரப் பாதிப்பால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த காலங்களைக் காட்டிலும் நாட்டில் தற்போது மனித உரிமைகள் சிதைவடைந்துள்ளன.

ஊழல் மோசடி, அரச நிதி வீண் விரயம் தற்போதைய பொருளாதாரப் பாதிப்புக்கு பிரதான காரணம் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஊழல் ஒழிப்பு சட்டமூலம் இதுவரை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படவில்லை, ஊழலற்ற அரச நிர்வாகத்தை முன்னெடுக்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. இவ்வாறான நிலையில் சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது சாத்தியமற்றது. – என்றார்.

# ஒன்பது பாடங்களிலும் 'ஏ' சித்தியடைந்த மாணவன்மீது மண்ணெண்ணெய்யை ஊற்றி தீ வைத்த விசமிகள்!

கண்டி, நவ. 30

கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' சித்தியடைந்த அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் மீது மண்ணெண்ணெய்யை ஊற்றி எரித்ததால் காயமடைந்த அவர் கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

கண்டி, அம்பிட்டிய பல்லேகமவில் வசிக்கும் குறித்த மாணவன் கடந்த 26 ஆம் திகதி இரவு பரீட்சை பெறுபேறுகள் வெளியான பின்னர் தனது சிறந்த பெறுபேறுகளை பாட்டிக்கு தெரிவிப்பதற்காக தந்தையுடன் சென்று கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் இருவரும் சென்று கொண்டிருந்தபோது தனது மகன் மீது சிலர் மண்ணெண்ணெய்யை ஊற்றி தீ வைத்தார்கள் எனவும் இருப்பினும் சந்தேக நபர்களை அடையாளம் காண முடியவில்லை எனவும் மாணவனின் தந்தை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அரசியலுக்கான விடுதலையும் விடுதலைக்கான விடுதலையும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 196**

இலங்கை – இந்திய ஒப்பந்தம் உருவாகிய காலத்திலும், அதற்கு முன்னரான 1983 இன் கலவர நாள்களில் இருந்தும் இந்திரா காந்தியுடனும், இணக்கமான நம்பிக்கைகள் ஏற்படுத்தி நடந்த தலைவர் அமிர்தலிங்கம்.

தனி நாட்டுக் கோரிக்கையை முன்னெடுத்து, வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றி, பின் அதன் அடிப்படையில் அடுத்து வந்த தேர்தலில் அமோகமாக அதற்கு மக்களிடம் இருந்து ஆணை பெற்று, பின் தொடர்ந்த 1977 இந் இனக் கலவரங்களில் பாதிக்கப்பட்டு, சிங்களப் பாதுகாப்பு படையினரால் தாக்கப்பட்டு, அவ்வளவு அவமானங்களுக்கு இடையிலும் காணி அபகரிப்பு, ராணுவ முகாம்கள் அமைப்பு, அவற்றின் விஸ்தரிப்பு, பல்கலைக்கழக அனுமதி போன்றவற்றில் தர்மிஷ்ட – ஆனால் தம்மிஷ்ட ஜே. ஆருடனும், அவர்களது பேரினவாத நிர்வாக துறையினருடனும் போராடி, 1983 இல் பலத்த சோதனைகளுக்கு ஆளாகி, தமிழகத்தில் தஞ்சம் பெற்று, அங்கிருந்து மத்திய அரசின் அனுசரணையுடன் தமிழர் விடுதலைக்காக இயங்கியவர். மக்களை விட்டு வெளியேறி வெளிநாட்டில் வசதியாக இருந்து அரசியல் செய்தி தருகிறார் என்ற குற்றச்சாட்டும் இருந்தது.

அந்த அனுபவங்களிலும், புவியியல் நிலைகளையும், அவற்றை அடுத்து இந்தியாவின் நிலைப்பாட்டையும் நேரடியான பேச்சுக்களால் புரிந்து கொண்டு, மாநில சுயாட்சி முறையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என இந்தியா தருகின்ற உத்தரவாதங்களை நம்பிப் பயணிக்கிறோம் என மயிலாப்பூர் அகடமியில் தந்த பேச்சில் குறித்து இருந்தார்.

அவருக்கும் ராஜீவ் காந்திக்கும், சிங்களப் பேராண்மை தரப்புகளும் ஜே.வி.பி. போன்றோரும் தரக்கூடிய சங்கடங்களின் ஆதங்கங்கள்தான் இந்தியப் படைகள் தமிழ் பகுதிகளில் அவர்களின் பாதுகாப்புக்காக நிலை கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வரத் தூண்டியது. அந்த ஆதங்கம் ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தை கைச்சாத்திட வந்த போது, அவருக்கு நடந்தவற்றால் அவருக்கே புரிய வைத்தது.

இப்பொழுது முன்னிலை சோசலிச கட்சியின் தலைவர் குணரத்தினம் இந்திய (அமைதி அல்லது ஆக்கிரமிப்பு) படையினருடன் யுத்தத்தில் ஈடுபட்டமை தவறா என அதன் கல்விச்செயலாளர் புபுது ஜெயகொட ஜனாதிபதி ரணிலிடம் கேள்வி எழுப்பி உள்ளார். இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிராக மக்கள் போராடினார்கள். அவற்றை ஒழுங்குபடுத்துவதில் குணரத்தினம் பங்கு பற்றினார் எனத் தெரிவிக்கிறார். இந்த அரசியல் அனுபவங்களின் கணிப்பையும், தமிழ் மக்களது வாழ்வாதாரங்களுக்கான உண்மையான எதிரிகள் யார்என்பதையும், யாவரும் கணக்கெடுத்திருக்க வேண்டும். ஆனால் ஊடகங்கள் செய்தி என நடத்திய அரசியல்களில் அவர்கள் குளிர் காய கண்ணாடிகள் போட்டமையால் நிஜங்கள் தெரியாமல் மாயமான தேடி ஓடினர்.

தமது சுதுமலைப் பிரகடனத்திலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் தமிழ் மக்களின் பாதுகாப்பை இந்தியா உறுதிப்படுத்தும் என நம்பி தாங்கள் ஆயுதங்களைக் கையளிக்க ஒப்புக் கொள்கிறார்கள் என தெரிவித்தமை மக்கள் வேண்



அமிர்தலிங்கம்

டியது, தாங்கள் சகஜ நிலைக்குத் திரும்பி, தங்களது நாளாந்தக் கருமங்களை வாழ்வாதாரத்துக்காக செய்வதற்கான சூழல் உருவாக வேண்டும் என்பதுதான்.

சுய விமர்சனத்துக்காக அந்த உரையை ஆற்றிய கூட்டத்தின் காணொலி யைக் கவனித்தால் பிரபாகரனுக்கு முன் பல விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் உணர்ச்சி வசமாகத் தங்களது அர்ப்பணிப்புகளையும், வீரதீரங்களையும், இலட்சிய பற்றையும் பற்றியும் பேசினாலும், லட்சக்கணக்கான மக்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். பின்னர் பிரபாகரன் பேசியமையையும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த மக்கள், எப்பொழுது அவரிடம் இருந்து 'இந்தியாவிடம் தமிழ் மக்களின் பாதுகாப்பை கையளித்து ஆயுதங்களை ஒப்படைக்கச் சம்மதிக்கிறோம்' என்ற வார்த்தைகள் வந்தனவோ அப்போது சந்தோக் கரகோசம் பெருவாரியாக ஒலித்தது. மக்கள் அதனைத்தான் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் பின்னர் தாங்கள் ஒரு விதி எமக்கெனச் செய்வோம் என்று இந்தியாவை எதிர்த்த போராட்டத்தில் ஈடுபட்டும், பிரேமதாஸாவை, சந்திரிகாவை, மஹிந்தவை, மைத்திரியை, கோட்டபாயவை ஜனாதிபதியாகக் கண்டு, பேரினவாதமும் பேராண்மையும் தம் இலக்குகளை நோக்கி முன்னேறியமையையும் தடுக்க முடியாமல், இப்பொழுது ஜனாதிபதி ரணில் தீர்வு தரக் கூடும் என எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

ஆதலால் அரசியலின் அடிப்படையில் தமிழ் மக்கள் அமிர்தலிங்கத்தினதும், கூட்டணியினரினதும் பாதையிலும், ஒப்பந்தத்தை ஏற்றும் பயணித்திருக்க வேண்டுமா, அன்றில் பிரபாகரன் தேர்ந்தெடுத்த ஆயுதப் போராட்டத்தை அவர்களின் வழியிலேயே விட்டுவிட்டுப் பயணித்திருக்க வேண்டுமா என்பது பலமாகவும் ஆயுதங்கள் ஊடாகவும் கூட விவாதிக்கவும் போராடவும் பட்டது. இன்று அது பட்டிமன்றத்துக்குத் தான் உகந்தது.

தமிழ் மக்களின் அனுபவங்கள், அவர்களுக்கு அவற்றின் பதிலையும் தெளிவுகளையும் தர வேண்டும். நடந்து போனவற்றையொட்டி விவாதிப்பதில் தமிழ் மக்கள் இழந்தவற்றை மீட்டுக் கொள்ள முடியாது. இருப்பதில் இருந்துதான் முன்னேற வேண்டும். அவற்றுக்கான சாணக்கியமும், சாதுரியமும், புத்திகளும் இந்தப் பட்டறிவுகளில் இருந்துதான் வர வேண்டும்.

நான் அறிந்து கொண்ட அளவில் பிரபாகரன் அர்ப்பணிப்புகள் நிறைந்த விடுதலைப் போராளி. தனது முன்னுதாரணமான அர்ப்பணிப்புகளால் பல போராளிகளை உருவாக்கியவர். சிங்களப் பேராண்மைக்கு கிலி கொடுத்தவர். ஆனால் அவர் அரசியல்வாதி அல்லர். சர்வதேச புவியியல் அரசியலின் நெளிவு சுழிவுகளில் அனுபவம் கொண்டவரும் அல்லர்.

அவருடைய அரசியல் மதியுரைஞர் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இணைந்து செயல்பட்டு, அங்கிருந்து தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அபிப்பிராயத்தில் இருந்தவர். அதன் தொனிகளை பிரபாகரனின் சுதுமலைப் பிரகடனத்தில் பார்க்கலாம். துரதிஷ்டவசமாக இயக்க இரகசியங்களினால் அவருக்கு ஆயுதப் போராட்டத் திட்டங்களும், தாக்குதல்களும் முன்கூட்டியே தெரியப்படுத்தப்படுவதில்லை. அவை நடைபெற்ற பின் விளைவுகளை அரசியல் ரீதியாக நியாயப்படுத்தி வந்தார். திம்புவின் பின் மற்ற இயக்கங்களின் தலைவர்கள் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளோ, பாலசிங்கம் இடதுசாரிகளாக மதிப்பும் நட்பும் வைத்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். தோழர்கள் பத்மநாபா, கேதீஸ்வரன், லோகநாதன் போன்றோரது கொலைகளோ, ஏன் ராஜீவ் காந்தியினது கொலையோ, அவற்றால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகளோ, எவையும் அவருடன் கலந்தாலோசிக்கப் பட்டவை அல்ல. தான் விடுதலைப் புலிகளுக்காகச் செய்ததில், மிகவும் சோகமானது ஸ்ரீலங்கா படைகளின் தடுப்பிலிருந்த புலேந்திரன், குமரப்பா மற்றும் போராளிகளுக்கு சைனைட் குப்பிகளைத் தனது கழுத்தில் அணிந்து சென்று, கையளித்ததுதான் எனத் தனது நூலில் குறிப்பிடுகின்றார். அதன் விளைவுகளையும் திட்டங்களையும் கூட அவர் அறிந்து கொண்டிருக்கவில்லை. ஆக்கிரமிப்புக்கள் தொடங்கி, அவரும் பிரபாகரனுமே வெவ்வேறு மறைவிடங்களுக்குச் சென்றமையால் இருவரிடையுமே தொடர்புகள் இருக்கவில்லை. தன்னால் தொடர்பு கொள்ள முடிந்தவர்களிடம் பாலசிங்கம் பிரபாகரனுடன் பேசி, இந்த முட்டாள்தனத்தை நிறுத்தும்படிதான் கோரினார். பின்னர் இந்தியா வந்து அந்த முயற்சிகளில் தமிழ் நாட்டின் ஆதரவாளர்களோடு ஈடுபட்டாலும், அவர் இருந்த தேடப்பட்ட நிலையில் காத்திரமாக எதுவும் செய்ய முடியாமல், லண்டன் சென்று, பின் பிரேமதாஸாவின் தொடர்பில் பேச்சுவார்த்தைகளில் இணைந்து, நோர்வேதியின் சமாதான பேச்சு வரை கைகட்டி பணித்தும், பாலசிங்கத்தின் அரசியல் அறிவு, அனுபவம் விடுதலைப் புலிகள் மாறும் புவியியல் நிலையிலும் இந்தியா நோர்வேக்குத் தந்த வழுவழுப்பான நிலைப்பாடுகளாலும் விடுதலை புலிகளை ஒட்டிய அவர்களது கணிப்பினாலும் சமாதான பேச்சுக்களை முன்னெடுத்துக் கொண்டு தீர்வை அடைய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியும் அவை கேட்கப்படவில்லை.



அன்டன் பாலசிங்கம்

விடுதலை புலிகளையோ தமிழ் மக்களையோ இரத்தக் களரிக்கோ இனப் படுகொலைக்கோ எடுத்துச் செல்லக் கூடிய அரசியல் பாதையைத் தான் வகுக்க அவர் விரும்பவில்லை. இனிமேல் நடக்கக் கூடியவைகளால் தனது கரங்களில் இரத்தக் கறை படியாது எனத் தான் ஒதுங்கி இருந்த காலங்களில் தனக்குக் கிட்டிய நண்பர்களுக்கு அவற்றை தெரிவித்து, காரணங்களையும் பகிர்ந்தார். அங்கோ, இங்கோ அவை இலை மறை காயாக வெளிவருவதேய்ச்ன்றி, விடுதலைப் புலிகளின் தளங்களுக்கும் அவை நடத்தும் ஊடக அரசியலுக்கும் பங்கமோ அதிர்ச்சியோ தராமல், அறிந்தவர்கள் யாவரும் நடந்து கொள்கிறார்கள்.

### ஒரு குறிப்பு

இந்தப் பதிவுகளின் போது, பேச்சுவார்த்தைகள் எனப் பேச்செழுந்த போதும், மாவீரர் தின நினைவுகளின் முன்னெடுப்பு நாள்களிலும், பல நண்பர்கள், வாசகர்கள், செய்திகளும் வீடியோக்களும் குறுஞ் செய்திகளும் பகிர்ந்தனர். பல தகவல்கள், பல கோணங்கள். யாவற்றையும் பதிந்து அபிப்பிராயம் தருவது கடினம். அவற்றில் சிலவற்றை பகிர்வது மக்களின் அபிப்பிராயங்களுக்கும் புரிந்துணர்வுகளுக்கும் உதவும் என்பதால் அவற்றை தொடர்ந்து பார்க்கலாம்.

(வளரும்...)

## நினைவேந்தலைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

விடுதலைபுலிகள் அமைப்பினர் மனித உரிமைகளுக்கு எதிராகவே செயற்பட்டார்கள் என்றும் அவர்களையே தமிழர்கள் நினைவுகூருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையை பாதுகாக்கும் வகையில் அமுல்படுத்தப்பட்ட பௌத்த சாசனம் பாதுகாக்கப்பட்டால் தான் நாடு பாதுகாப்பாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமஷ்டி முறைமையின் கீழ் நாட்டை பிளவுப்படுத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் புத்தசாசனம் பற்றி குறிப்பிட வேண்டிய தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் தற்போதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புத்தசாசனத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது எனவும் சரத் வீரசேகர தெரிவித்தார்.

## யாழில் போக்குவரத்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குறுதிக்கமைய போராட்டம் கைவிடப்படுவதாக இலங்கைப் போக்குவரத்துச் சபைதொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாண சாலை ஊழியர்கள் நேற்று முன்தினம் காலை முதல் திடீர் பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக பொதுமக்கள், அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

சில நாள்களுக்கு முன்பு இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தாக்கிய நபர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தாக்கிய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியே பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இ.போ.ச. யாழ் சாலை ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு ஆதரவாக வடக்கு மாகாணத்தில் உள்ள ஏழு சாலைகளும் ஒன்றிணைந்து நேற்றைய தினம் பணிபுறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண சபைகளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன நாட்டின் கிராமப்புற மக்களுடன் இணைந்து செயலாற்றுவதில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் சிறந்த பங்களிப்பை வழங்க முடியும் கூடுதல் செலவுகள் இன்றி அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பங்களிப்புடன் அந்த தவறுகளை இயங்க வைக்க முடியும் என்று குறிப்பிட்டு அதற்கு அழைப்பு விடுத்தார்

முன்னாள் ஜனாதிபதி ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவின் காலத்தில் அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை என்ற அதிகார பகிர்வு திட்டத்தை மைத்திரிபால சிறிசேன சிலாகித்து குறிப்பிட்டார்

ஆனால் அந்த மாவட்ட அபிவிருத்தி சபைக்கான தேர்தலின் போதே யாழ் நூலகம் எரிக்கப்பட்டது என்ற விபரத்தையும் பிசினத்துடன் அவர் சுட்டிக் காட்டினார்

அச்சமயம் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாகாண சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்தி சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கு தயார் என்று அறிவித்தார்களை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கு தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டின் கிராமப்புற மக்களுடன் இணைந்து செயலாற்றுவதில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் சிறந்த பங்களிப்பை வழங்க முடியும், கூடுதல் செலவுகள் இன்றி அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பங்களிப்புடன் அந்த சபைகளை இயங்க வைக்க முடியும் என்று குறிப்பிட்டு அதற்கு அழைப்பு விடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தில் அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை என்ற அதிகார பகிர்வு திட்டத்தை மைத்திரிபால சிறிசேன சிலாகித்துக் குறிப்பிட்டார்.

ஆனால் அந்த மாவட்ட அபிவிருத்தி சபைக்கான தேர்தலின் போதே யாழ் நூலகம் எரிக்கப்பட்டது என்ற விவரத்தையும் விசனத்துடன் அவர் சுட்டிக் காட்டினார்.

அச்சமயம் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாகாண சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்தி சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கு தயார் என்று அறிவித்தார்.

## தொல்பொருள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துறை மற்றும் புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள், கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு;-

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு என்பதிலே பிழை காணப்படுகிறது. இந்த அமைச்சு மத விவகாரங்கள், கலாசார அலுவல்கள் அமைச்சாக குறிப்பிடப்பட வேண்டும். அல்லது மத விவகாரங்கள் என்பதற்கு பதிலாக நாட்டில் உள்ள அனைத்து மதங்களும் அதில் உள்வாங்கப்பட வேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இந்துக்கள் ஆரம்ப காலத்தில் இருந்து வழிபாடுகளில் ஈடுப்பட்டார்கள்.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தொல்பொருள் சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்தது.

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பகுதியில் தொல்பொருள் சின்னங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தப்படவில்லை எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தமிழர்களின் பாரம்பரிய சின்னங்களை திட்டமிட்டு அழிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் கைவிட வேண்டும். வெடுக்குநாறி மலையில் இந்துக்கள் பாரம்பரிய வழிமுறைகளுக்கு அமைய வழிபாடுகளில் ஈடுபட அனுமதி வழங்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறுந்தூர் மலைவிவகாரம் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் குறுந்தூர் கோயிலுக்கு அப்பாற்பட்ட காணி விடயம் தொடர்பில் குறிப்பிடுகிறேன்.

இப்பிரதேசத்தில் உள்ள காணிகளில் 5 அல்லது 6 ஏக்கர் காணியை தவிர்த்து ஏனைய காணிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி மற்றும் விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சர் குறிப்பிட்டுள்ள போதும் மாவட்ட அரச அதிகாரிகள் அதற்கு எதிராகச் செயற்படுகிறார்கள்.

தொல்பொருள் திணைக்களத்தின் ஒருசில அதிகாரிகளின் செயற்பாடுகள் பிரச்சினைகளைத் தீவிரப்படுத்தும் வகையில் காணப்படுகின்றன.

இனங்களுக்கிடையில் தொடர்ந்து முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகிறார்கள். ஆகவே இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும். - என்றார்.

## 13 க்கு இணங்குவதற்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்த ஜனா திபதி முதலில் ஆளுங்கட்சி அதிகாரப் பகிர்வுக்கு ஒத்துழைக்குமா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தின் போது தான் முன்னின்று அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்துவார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

அன்று நாடாளுமன்றத்தில் எதிரணியின் பக்கம் விரலைச் சுட்டிக்காட்டி அதிகாரப் பகிர்வுக்கு தயாரா என்று கேள்வி எழுப்பியிருந்தார். எப்போதும் அதிகாரப் பகிர்வுக்கு எதிர்க்கட்சி தயாராகவே இருக்கிறது என்பதை கூறிக்கொள்கிறேன்.

இருப்பினும் அன்று எதிர்க்கட்சியைப் பார்த்து கேள்வி எழுப்பிய ஜனாதிபதி தனக்கு பின்னால் இருப்பவர்களை பார்த்து இந்த கேள்வியைக் கேட்பதற்கு மறந்து விட்டார். நாம் எப்பொழுதும் பொறுப்புடனே செயல்படுகிறோம். எதிர்க்கட்சி என்ற வகையில் அரசியல் சிறப்புரிமைகளுக்காக எமது கொள்கைகளைக் காட்டிக் கொடுக்க மாட்டோம்.

ஜனாதிபதி ரணில் தன்னை பாதுகாக்கும் தரப்பினரிடம் முதலில் அதிகாரப் பகிர்வுக்கு இணங்குவார்களா என்பதைக் கேட்க வேண்டும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என்று கூறியவர்கள் ஜனாதிபதியிடம் இன்று இருக்கிறார்கள்.

மேலும் பொதுஜன பெரமுன மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாட்டில் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சிக்கு வந்த கட்சியாகும்.

இந்நிலையில் அதிகாரப் பகிர்வுக்கு பொதுஜன பெரமுனவின் ஆசீர்வாதம் மற்றும் நிறைவேற்றுவதற்கான அனுமதி கிடைக்குமா என்பதை ஜனாதிபதி முதலில் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லை எனில் நாட்டில் அதிகாரப்பகிர்வுக்கு இடமில்லை. - என்றார்.

## யுத்தத்தை வென்றோம்; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை இடம்பெற்ற - 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிளவுபடாத மற்றும் நடுநிலையான வெளிவிவகார கொள்கையின் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில், தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காணும் வகையில் வெளிவிவகார கொள்கையின் குறுகிய மற்றும் நீண்டகால கொள்கையில் மாற்றம் ஏற்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையில் வெளிவிவாரத்துறை அமைச்சு நிதியமைச்சுடன் ஒன்றிணைந்து செயற்படுகிறது. கொடு கடன் மறுசீரமைப்புக்கான சட்டம் மற்றும் நிதி ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் வெளிவிவகாரத்துறை அமைச்சு சுற்றுலாத்துறை அமைச்சுடன் ஒன்றிணைந்து செயற்படுகிறது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் மாத்திரம் 2 இலட்சத்துக்கு 75 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய அமைச்சுக்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவது குறுகிய கால திட்டமாக உள்ளது.

12.5 பில்லியனாக காணப்படும் இலங்கையின் சர்வதேச பிணைமுறிகளை எதிர்வரும் ஆண்டு 5 பில்லியனாக குறைத்துக் கொள்வது மத்தியகால திட்டமாக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் ஜனவரி மாதளவில் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச திட்டங்களில் ஒன்றிணைய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இந்திய பெருங்கடலின் தீவு நாடுகளுடன் ஒன்றிணைந்து காலநிலை மாற்ற நிதியுதவிகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் வெற்றிக்கொள்ளப்பட்டாலும், நாட்டில் சமாதானம் கட்டியெழுப்பப்படவில்லை. அனைவருக்குமான நாட்டை உருவாக்க வேண்டிய சூழல்தோற்றம் பெற்றுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தில் ஒருசில திருத்தம் செய்யப்பட்டுள்ளமையால் பல ஆண்டு காலம் சிறையில் இருந்த தமிழர்களை விடுதலை செய்ய முடிந்தது. எதிர்வரும் நாள்களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது சிக்கல் நிறைந்ததாக காணப்படுகிறது. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையிலும் புலம் பெயர் அமைப்புகளுடன் தொடர்புகளை மேம்படுத்தும் வகையிலும் சர்வதேச தொடர்பு அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் அமைப்புக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கனடாவில் புலம் பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அண்மையில் நாட்டுக்கு வருகை தந்தார்கள். எதிர்வரும் நாள்களில் பிரித்தானியாவின் புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தருவார்கள். இவர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

நாடு என்ற ரீதியில் நீண்டகால திட்டங்களை வெளிவிவகாரத்துறை அமைச்சு ஊடாக வகுக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்துடன் ஒன்றிணைந்து 'உண்மை மற்றும் நல்லிணக்கம்' ஆணைக்குழுவை அமைக்க அவதானம் செலுத்தப்பட்டு, அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் இந்தியா, சீனா உட்பட பல்வேறு நாடுகளின் வெளி விவகார அமைச்சர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நிலையில் அவர்கள் உள்ளிட்ட மேலும் பல ராஜதந்திரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதன்மூலம் சர்வதேசநாடுகளுடனான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்த முடியும். சர்வதேச மாநாடுகள் பலவற்றிலும் ஜனாதிபதியின் தலைமையில் நாம் கலந்து கொண்டிருந்தோம். அந்த மாநாடுகளில் இணை அமர்வுகள் எமக்கு பெரும் பயனுள்ளதாக அமைந்தன.

சர்வதேச நாடுகளில் பணிபுரிவோர் தொடர்பில் இக்காலங்களில் பேசப்பட்டு வருகின்றன. அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் பேச்சு வார்த்தைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு வெளிநாடுகளில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பில் ஊடகங்கள் மூலம் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அரசாங்கம் இதுவரை ஓமானிலிருந்து 300 பேரை இலங்கைக்கு அழைத்து வந்துள்ளமையை குறிப்பிட வேண்டும்.

ஒருவருக்கு 17 லட்சம் ரூபா செலவாகின்ற நிலையில் வெளிநாட்டு அமைச்சே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. தொடர்ந்தும் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் அதற்காக பெருமளவு நிதி தேவைப்படும். - என்றும் அவர் தெரிவித்தார்.

# பௌத்த அறக் கொள்கையை பேணும் சிங்களவர்களை காணாமல்போனோர் அலுவலக தலைவராக நியமிக்குக!

## சிறிதரன் எம்.பி. கோரிக்கை



இறுதிக்கட்ட யுத்தத்தில் படையினரிடம் எவரும் ஒப்படைக்கப்படவில்லை என காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த குறிப்பிட்டுள்ளமை பொறுப்பற்றதாகும்.

இவ்வாறனவர்கள் தான் இந்த நாட்டுக்கு வினையாக உள்ளார்கள். பௌத்த அற கொள்கையைப் பேணும் சிங்களவர்கள் நாட்டில் உள்ளார்கள். அவர்களை காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவராக நியமியுங்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் போக்குவரத்து, வெளிவிவகார மற்றும் ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வுக்கு பாரிய தடைகள் காணப்படாத போது ஒருசில பகுதியில் படையினர் தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர அவர்களுக்கு எவ்வித தடைகளையும் ஏற்படுத்தாத ஜனாதிபதிக்கும், தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்ட இளம் சிங்கள சகோதரர்களுக்கும் இந்த உயரிய சபை ஊடாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இனங்களுக்கிடையிலான புரிதல் கட்டம் கட்டமாக வளர்ச்சியடைந்து செல்கின்றமை வரவேற்கத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோப்பாய், கொடிகாமம், எல்லன் குளம் மாவீரர் துயிலும் இல்லம், வவுனியா மாவட்டத்தில் ஈச்சன் குளம் துயிலும் இல்லம், முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை, ஆலன்குளம் துயிலும் இல்லம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் தேராவில் துயிலும் இல்லம் இன்றும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன.

இந்த துயிலும் இல்லங்களை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க வேண்டும். இது இந்த நாட்டின் நல்லிணக்கத்தின் அடித்தளமாக அமையும் என்பதைக் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

இந்த மாற்றங்கள் தான் நாட்டின் உண்மையான சமாதானத்தை உறுதிப்படுத்தும். சர்வதேசத்தின் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பு இல்லாமல் நாடு என்ற ரீதியில் தனித்துச் செயற்பட முடியாது.

யுத்த காலத்தில் சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டதைப் போன்று உண்மையான இன நல்லிணக்கத்துக்கான சர்வதேச அணுகுமுறைகளைத் தற்போது பெற்றுக்கொள்ள வேண்டும்.

அரசசேவையாளர்களுக்குநாணயத்தை அச்சிட்டு சம்பளம் வழங்கிக் கொண்டு வெளிநாட்டு கடன்களைத் திருப்பிச் செலுத்த திணறிக் கொண்டிருக்கும் அரசாங்கத்திடம் அபிவிருத்தி பற்றிப் பேசுவது பயனற்றது. நாட்டை சீராகக் கட்டமைப்பது அவசியமாகும் அதற்குத் தமிழ் மக்கள் தயாராக உள்ளார்கள். வரலாற்று ரீதியில் அவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் ஐம்பதுக்கு ஐம்பது அதிகாரம் கோரப்பட்டது, தந்தை செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், அனைத்து கட்சி தலைவர் குழு, சந்திரிகா தீர்வு திட்டம். ரணில் –பிரபா ஒப்பந்தம், பிற்பட்ட கால ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்ட போதும் அவை நிறைவேற்றப்படவில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் கட்டம் கட்டமாக முன்னேற்றமடையும் போதும் அவர்கள் மீதான அடக்குமுறைகள் நிறுத்தப்படவில்லை.

தமிழ் மக்களின் காணி உரிமை இன்றும் மறுக்கப்பட்ட நிலையில் உள்ளன. விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பல தமிழர்கள் காணாமலாக்கப்பட்டார்கள்.

பாலகுமாரனும் அவரது மகள் சூரியதேவனும் இராணுவத்திடம் வந்ததை ஊடகங்கள் வெளியிட்டன ஆனால் அவர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் இல்லை.

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தவர்களுக்கு நேர்ந்தது என்ன என்பது மறைக்கப்பட்டுள்ளது, இதுவரை நீதி கிடைக்கவில்லை. இராணுவத்தினரிடம் ஒப்படைத்த தமது உறவுகளை கேட்டு இன்றும் எமது உறவுகள் வீதியில் போராடுகிறார்கள்.

நாட்டில் நல்லிணக்கத்தைஸ்தாபிப்பதாக 2010 ஆம் ஆண்டு நல்லிணக்க ஆணைக்குழு என்பதொன்று உருவாக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் ஆணைக்குழுவிற்கு சாட்சியமளிப்பதை பொலிஸாரும்,புலனாய்வு பிரிவினரும் தடுத்தார்கள். பல சவால்களுக்கு மத்தியில் மக்கள் சாட்சியமளித்தார்கள்.

ஒரு லட்சத்து 45 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காணாமலாக்கப்பட்டுள்ளதுடன், கொல்லப்பட்டுள்ளார்கள் என காலஞ்சென்ற மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை 142 அறிக்கையை ஆணைக்குழுவிடம் கையளித்தார். அவர் இன்று உயிருடன் இல்லை, ஆனால் அவர் சமர்ப்பித்த அறிக்கை பெறுமதியானது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை நியமித்த ஜஸ்மீன் சூக்கா தலைமையிலான குழுவினர் முள்ளிவாய்க்கால் பகுதியில் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்டையில் சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் நிலைமாறு நீதி மற்றும் போர் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டது. முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதாகவும், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தை ஸ்தாபித்து அதனூடாக தீர்வு வழங்குவதாகவும் நல்லாட்சி அரசாங்கம் சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கியது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் காணாமல் போனோர் அலுவலகத்தை ஏற்கவில்லை. நம்பிக்கை இல்லை, நீதி கிடைக்காது என பாதிக்கப்பட்ட உறவுகள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றும் காணாமலாக்கப்பட்டோர் காணாமல் அலுவலகத்தின் செயற்பாடுகள் இழுபறி நிலையில் தான் காணப் படுகின்றன.

இவ்வாறான பின்னணியில் காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த, நாட்டில் இனப்படுகொலை என்பதொன்று இடம்பெறவில்லை, படையினரிடம் கையளிக்கப்பட்டதற்கு ஆதாரம் இல்லை என ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளமை அவதானத்துக்குரியது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்கவும் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆணைக்குழுக்களின் அறிக்கைளும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டும்.

அறிவுபூர்வமாக சிந்தித்து காணாமல் போனோர் விவகாரத்துக்குத் தீர்வு காண வேண்டும். இராணுவத்தினடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் தொடர்பில் சர்வதேசம் பல ஆவணபடங்களை வெளியிட்டுள்ளன. ஆதாரம் இல்லை என்று குறிப்பிடுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது,

உயிருக்கு விலை பேசுவதை விடுத்து, என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துங்கள். ஆகவே நீதி கிடைப்பதற்கான வழிமுறைகளைக் கொண்டு வாருங்கள் 13 வருடங்களாகத் தமது உறவுக்காக போராடிய 190 பேர் இதுவரை உயிரிழந்துள்ளார்கள்.

தமது பிள்ளைகள் என்றாவது வருவார்கள் எனக் காத்துக் கொண்டிருக்கும் தாய், தந்தையின் மன குமுறல்களையும், ஏக்கங்களையும் சற்று மனிதாபிமானத்துடன் சிந்தித்துப் பாருங்கள். காணாமல் போன தமது பிள்ளைகளின் வருகைக்காக பல தாய், தந்தையர்கள் எதிர்பார்ப்புடன் உள்ளார்கள், உண்மை பிரச்சினைக்குத் தீர்வு இல்லை, இதுவே இந்த நாட்டின் அவலத்துக்குப் பிரதான காரணம்.

நாங்கள் இந்த விடயத்தைக் குறிப்பிட்டால் அதனை ஒரு தரப்பினர் இனவாதமாகப் பார்க்கிறார்கள். புரையோடிபோயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அதிக கவனம் செலுத்துங்கள். தீர்வுக்கான வழி தொடர்பில் அவதானம் செலுத்துங்கள். தற்போதைய நிலைக்குத் தீர்வு காணாவிட்டால் நாடு மேலும் அதள பாதாளத்துக்கு செல்லும்.நாட்டு மக்களுக்கு பொய்யுரைக்க வேண்டாம். கட்டுலந்த போன்றோரை முதலில் நீக்கி, மனிதாபிமானத்துடன் செயற்படும் தரப்பினரை நியமிக்க வேண்டும். – என்றார்.

# கடன்பொறி குறித்த அலிசப்றியின் கருத்தை வரவேற்கின்றது சீனா!



சீனாவின் கடன்பொறி தொடர்பாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்றி தெரிவித்துள்ள கருத்துக்களை சீனா வரவேற்றுள்ளது.

சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜாவோ லிஜான் செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கேள்வி: இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்றி சமீபத்தில் இலங்கை சீனாவிடம் சென்று நிதி உதவியை கோரியவேளை சீனா அதனை மதித்தது சீனா நிதியை பெற்றுக்கொள்ளுமாறு அழுத்தங்களை கொடுக்கவில்லை என தெரிவித்திருந்தார்.

சீனா இலங்கைக்கு சில நிதி உதவிகளையும் வழங்கியது கடன் உதவிகளையும் மனிதாபிமான உதவிகளையும் வழங்கியது என அவர் தெரிவித்திருந்தார்.

கடன்பொறி என்பது மேற்குலக வார்த்தை பிரயோகம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்த சீனாவின் கருத்து என்ன?

பதில்: நாங்கள் இலங்கை வெளிவிவகார அமைச்சரின் கருத்தை வரவேற்கின்றோம், இலங்கையில் சீனாவின் கடன்பொறி என பயன்படுத்தப்படும் சொல்லாடலை வலுவாக நிராகரிக்கும் கருத்து இதுவாகும்.

இலங்கைக்கான சீனாவிற்கான உதவிகள் ஒருபோதும் அரசியல் நிபந்தனைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை நான் வலியுறுத்துகின்றேன்.

இலங்கையில் முதலீடு மற்றும் நிதி உதவி தொடர்பான விடயங்களில் நாங்கள் எப்போதும் சுயநலத்துடன் செயற்படவில்லை. இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் மற்றும் சவால்களை சீனா முழுமையாகப் புரிந்துகொண்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளை உரிய விதத்தில் தீர்ப்பது தொடர்பாக உரிய நிதி அமைப்புகளுக்கு ஆதரவை வழங்குகின்றது.

எங்கள் சக்திக்கு உட்பட்ட வகையில் நாங்கள் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உதவி வழங்கி வந்துள்ளோம். – என அவர் தெரிவித்துள்ளார்.

# புத்தளம் பிரதேசத்தில் மீண்டும் எரிபொருளுக்கு நீண்டவரிசை!

புத்தளத்தில் மீண்டும் எரிபொருளுக்காக மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்தனர்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முதல் புத்தளம் பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிலையத்தில் மாத்திரம் பெற்றோல் வழங்கப்பட்டது.

கியு. ஆர். குறியீட்டின் மூலம் பெற்றோல் விநியோகிக்கப்பட்ட பெற்றோலைப் பெறுவதற்கு மோட்டார் சைக் கிள்களிலும் ஓட்டோக்களிலும் மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதைக் காணக்கூடியதாக இருந்தது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.11.2022இல் வெளியிடப்பெற்றது.